கலைஞர் 100 1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 25.01.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தர உறுதி" குறித்த பயிற்சி

"வேளாண்மைக் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தர உறுதி" குறித்த மூன்று நாள் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தால் கடந்த 22.1.2025 முதல் 24.1.2025 வரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் இணைபேராசிரியர்களுக்கு நடத்தப்பட்டது.

இப்பயிற்சியைத் துவக்கி வைத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இர. தமிழ்வேந்தன், சமீபத்திய தொழில்நுட்பங்கள் குறித்த சிந்தனையை மேம்படுத்தி கொள்வது அவசியம் என்றார்.

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன முதல்வர் முனைவர் ந. வெங்கடேச பழனிசாமி, முதுநிலை படிப்பு பள்ளி முதல்வர் முனைவர் தே. சுரேஷ்குமார் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

பேராசிரியர் மா. இரா. சீனிவாசன் அவர்கள் (பூச்சியியல்) வரவேற்புரையும், பேராசிரியர் த. சம்சாய் (வேளாண் ஊரக மேலாண்மை) நன்றியுரையும் வழங்கினர்.

கல்வி தணிக்கை, மதிப்பீடு, தர உறுதிப்பாட்டிற்கான அங்கீகாரம் மற்றும் தர வரிசை, டிஜிட்டல் கற்பித்தல் தொழில்நுட்பங்கள், வளர்ந்து வரும் வேளாண்மைச் சுற்றுச்சூழல் அமைப்பு சார்ந்த தர ஆராய்ச்சி, சைபர்

கிரைம் பாதுகாப்பு, தரமான உயர் கல்விக்கான கலப்பு முறை கற்றல் நுட்பங்கள், வேளாண் ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல், தரவு பகுப்பாய்வு, தரவை விளக்குதல் மற்றும் குறிப்பு மேலாண்மை, அறிவுசார் சொத்துரிமை மற்றும் காப்புரிமை போன்ற சமீபத்திய தொழில் நுட்பங்கள் மட்டுமின்றி மன அழுத்த மேலாண்மை குறித்துப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியின் நிறைவு விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வே. கீதாலட்சுமி அவர்கள் இப்பயிற்சியில் பங்கேற்றவர்களைப் பாராட்டி வாழ்த்தினார்.

மேலும், இவர் கூறுகையில் மாணவர்களின் கற்பித்தலை உயர்த்துவதற்கும், கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், உயர் கல்வியில் தர நிர்ணயம் முக்கியமானதாகும் என்றார். கல்வி தரத்தை உறுதிபடுத்துவதற்கு இது போன்ற புத்தாக்கப் பயிற்சி அவசியமாகிறது. இதன் மூலம் கற்பித்தல் செய்திறன் மற்றும் மாணவர்களின் வளர்ச்சி திறனும் மேம்படுகிறது. இதுவரை 15 தொடர் பயிற்சிகள் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி முதல்வர்கள், இரவல் பணியில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், மற்றும் ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சி நேபாளத்தில் உள்ள திரிபுவன் பல்கலைக்கழகத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குநர் முனைவர் பி. ஜெயகுமார், வணிக மேம்பாட்டு இயக்குநர், முனைவர் ஏ. சோமசுந்தரம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர், முனைவர் அ. ரவிராஜ் ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

இணைபேராசிரியர் முனைவர் க. கணேசன் (வேளாண் பூச்சியியல்) அவர்கள் வரவேற்புரையாற்றினார். இணைபேராசிரியர் முனைவர் பெ. ச. கவிதா (தோட்டக்கலை) அவர்கள் தனது நன்றி உரையினை வழங்கினார்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*